Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 330/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சந்திரசேகரன் |
| Father's Name | – | ராஜமாணிக்கம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 15th May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கோவையில் ரத்தினபுரியில் குடியிருந்து கொண்டு சுகாதாரத் துறை இணை இயக்குநர் அலுவலகத்தில் ஓட்டுநராகப் பணியாற்றி வருகிறேன். கடந்த 20.07.2017 ம் தேதி மாலை 4 மணியளவில் போலியோ மருந்து ஆய்விற்காக வடசித்தூருக்கு சென்றோம். வடசித்தூரில் போலி மருத்துவர்கள் இருப்பதாக இணை இயக்குநர் அலுவலகத்தில் இருந்து தகவல் கூறினார்கள். நான் இணை இயக்குநரை அழைத்துக்கொண்டு வடசித்தூருக்குச் சென்றேன். ஆஜர் எதிரிதான் மருத்துவமனை நடத்திவந்தார். இணை இயக்குநர் மருத்துவமனைக்குச் சென்று ஆய்வு நடத்தி அங்கிருந்த மருந்துகளைக் கைப்பற்றினார். அதற்குள் ஆஜர் எதிரி அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். பின்னர் இது குறித்து நெகமம் காவல்நிலையத்தில் தகவல் தெரிவித்தார்.இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

20.07.2017 ம் தேதியன்று நான் அலுவலில் இருந்ததற்கான ஆதாரத்தை போலிசாரிடம் கூறியுள்ளேன். அதற்குண்டான வருகைப் பதிவேட்டை போலிசாரிடம் கொடுக்கவில்லை. போலிசார் சம்பவத்தன்று நான் பணியில் இருந்ததற்கான ஆதாரத்தை கேட்டார்களா என்றால் கேட்கவில்லை, அதனால் நான் தரவில்லை. இணை இயக்குநர் திரு கண்ணன் என்பவரின் வீடு பொள்ளாச்சியில் உள்ளது என்றால் சரிதான்.

சம்பவ சமயத்தில் பொள்ளாச்சியில் மருத்துவக் கண்காணிப்பாளராகவும் கோவை இணை இயக்குநர் அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு அலுவலராகப் பணியாற்றினார். வடசித்தூருக்கு கோவை அலுவலகத்தில் இருந்துதான் நானும் அசா.1 ம் கிளம்பினோம். நான் கிளம்புவதற்கு முன்பு வேறு அலுவலில் இருந்தேன் என்றால் சரியல்ல. நானும் அசா.1 மட்டுந்தான் கிளம்பினோம். கோவையில் இருந்து செட்டிபாளையம் வழியாக நெகமம் சென்றோம்.

நானும் அசா.1 ம் சம்பவத்தன்று டாக்டர் சகாப்தீனைச் சென்று அசா.1 பார்த்தார். சுமார் 15 நிமிடம் அசா.1 சகாப்தீனுடன் பேசிக்கொண்டிருந்தார். சகாப்தீனுக்கு கிணத்துக்கடவில் கிளினிக் உள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நாங்கள் போலியோ ஆய்விற்காக சென்றோம் என்று போலிசார் விசாரணையில் கூறவில்லை, போலி மருத்துவர் ஊசி போடுகிறார் என்பதை விசாரிக்கச் சென்றோம். நான் போலியோ ஆய்விற்காகத்தான் சென்றோம், ஆனால் அதிகாரிகள் என்ன அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது.

வடசித்துாரில் வேறு மருந்தகத்தில் அன்றைய தினம் நாங்கள் விசாரணை செய்யவில்லை. சகாப்தீனுடன் பேசி முடித்தவுடன் ஆஜர் எதிரியின் இடத்திற்குச் சென்றோமா என்றால் செல்லவில்லை, போலியோ மருந்து குறித்து விசாரிக்கச் சென்றோம், ஊர் மக்கள் போலி மருத்துவர் இருக்கிறார் என்று கூறியதால் ஆஜர் எதிரியின் இடத்திற்குச் சென்றோம். போலிசாரிடம் பொது மக்கள் பெயரைக் குறிப்பிட்டு விசாரித்தோம் எனக் கூறவில்லை.

ஆஜர் எதிரியைப் பார்த்ததாகச் சொல்லும் முகவரி எனக்குத் தெரியாது, அத் இடத்திற்குச் சென்றால் எனக்குத் தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் போன வாரமும் தற்போதுந்தான் என்னை சாட்சியாக இருக்கச் சொல்லி அழைத்தார்கள். நாங்கள் வடசித்துாரில் வேலையை முடித்துவிட்டு காவல்நிலையம் சென்று முடிந்தவுடன் பொள்ளாச்சிக்கு 7.30 மணிக்கு வந்துவிட்டோம். புகாரை அசா.1 தான் எழுதிக்கொடுத்தார். புகார் எழுதிக்கொடுத்தவுடனே பொள்ளாச்சி வந்துவிட்டோம்.

அசா-1 உடன் நான் செல்லவில்லை என்றாலும் அசா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று எதிரியைப் பார்த்தாகக்கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.